Stadt Bern

கல்வி சமுகம் விளையாட்டுப்
பிரிவுகளின் நிர்வாகம்

சமுகசேவைப் பிரிவு

# சமுகசேவை உதவிக்கான தகவல் பிரதி



tamil

## பொதுவான தகவல்கள்

### உங்கள் மக்கள் சபையே பொறுப்பு

பேர்ண் மாநிலத்தின் சமுக சேவை உதவிச் சட்டத்தின் படி வதிவிட மக்கள்சபையே அப்பகுதியில் வாழும் பெண்கள் ஆண்களின் சமுகப் பாதுகாப்பிற்குப் பொறுப்பாகும். கடின சமுகப் பிரச்சனைகளின் காரணங்களைக் கண்டுபிடித்து அகற்றுவதும் வறுமை ஏற்படாமல் முற்பாதுகாப்பதும் மக்கள் சபையின் கடமையாகும். பேர்ண் நகரப் பகுதியில் கல்வி சமுகம் விளையாட்டுப் பிரிவுகளின் நிர்வாகமே சமுகசேவையின் சகல விடயங்களுக்கும் பொறுப்பாகும்.

### சமுக சேவை: தகமை வாய்ந்த இலவச ஆலோசனையும் உதவியும்

நீங்களும் உங்கள் குடும்ப அங்கத்தவர்களும் நிதி மற்றும் சமுக விடயத்தில் கடின அவசர நிலைக்குள் வந்தால் சமுக சேவைப்பகுதியின் உதவியை நாடலாம். அதற்கு நீங்கள் பேர்ண் நகரப்பகுதியில் வசித்தல் வேண்டும். வேறு எந்தவித உதவிகளும் பெறப்படாத சந்தர்ப்பத்திலேயே சமுக சேவைப்பகுதியின் உதவி கிடைக்கும்.

### சமுகசேவைப்பகுதி எவ்வாறு உதவுகிறது?

உதவி உங்கள் சொந்த சமுக மற்றும் நிதி நிலைக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும். உங்கள் சொந்த சமுக மற்றும் நிதி நிலைகளில் நீங்கள் சுய திடத் தன்மையை அடைவதற்கு வழிகாட்டுவதுடன் அதற்கான உதவியையும் வழங்குவதே இதன் கடமையாகும். இதன் நிதி உதவி சுவிசின் சமுகஉதவி (SKOS) சட்ட அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

## சமுகசேவைப்பகுதி என்ன கடமைகளை வழங்குகின்றது?

### தகவல்களும் இணைப்புகளும்

சமுகசேவையாளர்கள் இழப்பீடு நிதி நிறுவனம் போன்ற வேறு அரச நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தும். மற்றும் ஆலோசனை நிலைகள் தேவாலயங்கள் வைத்தியர்கள் உதவிகளை இணைக்கும்.

### ஆலோசனையும் கலந்துரையாடலும்

சமுகசேவையாளர்கள் உங்கள் சுயதேவை நிதி மற்றும் சகல சட்ட விடயங்களிலும் ஆலோசனைகளை வழங்குவார்கள். நீங்கள் சமுகப்பகுதியில் பண உதவியைப் பெறாவிட்டாலும் ஆலோசனைகளைப் பெறலாம்.

### நிதி உதவி

வேறு சகல நிதி உதவி முறைகளும் (காப்புறுதிகள், முதலாளிகள், வேலை இழந்தோர் பணஉதவி, சொந்த சொத்துச் சேகரிப்புகள் போன்றன) பாவித்து முடித்த பின்பாகவே சமுகசேவையின் நிதி உதவியைப் பெறலாம். நிதி உதவியின் அளவு உங்கள் வாழ்க்கைக்கான அவசரத் தேவைக்கான அளவில் கணக்கிடப்படும். ஒரு வீட்டினுள் வசிப்பவர்களின் தொகை இதில் கணிக்கப்படும். உங்களது வருமானமும் கட்டாயச் செலவுகளும் அடங்கிய வரவு செலவுப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் நிதி உதவி வழங்கப்படும். ஏற்கனவே இருக்கும் உங்கள் கடன் இதில் கவனிக்கப்படமாட்டாது.

உங்கள் பெற்றோர் அல்லது பிள்ளைகள் சிறந்த நிதி வருமான நிலையில் வாழ்ந்தால் அவர்களிடமிருந்து நிதி உதவி எடுக்கப்படலாமா என்று சிவில் சட்டப் புத்தகம் உறவினர் உதவிச்சட்டம் 328 இன் அடிப்படையில் ஆராயப்படும். சமுக நிதி உதவிகள் சில அடிப்படையில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை.

சமுக உதவி கோரும் நிலையைச் சுயமாகச் சம்பாதித்திருந்தால் அல்லது சொத்துகள் மற்றும் பணவிளையாட்டில் பணவருமானம் கிடைத்தால் அல்லது சிறந்த வேலை ஊதியம் கிடைத்தால் பெற்ற பணத்தைத் திருப்பிச் செலுத்தல் கட்டாயம்.

## உங்கள் உரிமைகள் என்ன?

**இலவச ஆலோசனை**
சமுகப்பகுதி இலவச ஆலோசனை வழங்கும். வேறு அரச நிலைகள், முதலாளிகள் போன்றவற்றில் உங்கள் உரிமையை நீங்கள் பெற உதவுவார்கள்.

**நம்பிக்கையும் உங்களுக்கான சட்ட உரிமையும் பாதுகாக்கப்படும்.**

இயலுமான விரைவில் உங்கள் விடயங்களுக்கு நாள் குறிக்கப்பட்டு தேவையான தகவல்கள் கண் காணிக்கப்படும். உங்கள் சகல தகவல்களும் பாதுகாக்கப்படும். சமுகசேவையாளர்கள் கடமை இரகசியம் பாதுகாக்க வேண்டியிருப்பதால் உங்கள் தகவல்களை சட்ட அடிப்படையில் (வதிவிட உரிமை போன்றன) பாதுகாப்பார்கள்.

**எழுத்து முறையில் பதிலும் வழக்குப் போடும் உரிமையும்**

உங்கள் நிதி உதவி கோரிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் எழுத்து முறையில் பதில் வழங்கப்படும். இத் தீர்மானத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் எதிர் வழக்குப் போடும் உரிமையுடன் பதிலைப் பெற்று வழக்குப் போடலாம்.

## உங்கள் கடமைகள் என்ன?

**சுயஆர்வக் கடமையும் சுயபொறுப்பும்**

சகல முறைகளிலும் முயற்சித்து சுய நிதியை முன்னேற்ற ஒத்துழைத்தல் வேண்டும். மீண்டும் சுய உழைப்பு ஊதியத்தைப் பெறுதல் சமுக உதவியின் முக்கிய இலக்காகும். தொழில் வாய்ப்புகளிலிருந்து நீங்கள் தள்ளி வைக்கப்படாதிருக்கக் கவனிக்கப்படும்.

தொழில் வாய்ப்புகளிலிருந்து நீங்கள் தள்ளி வைக்கப்படாதிருக்கக் கவனிக்கப்படுவதற்கும் மீண்டும் சுய உழைப்பு ஊதியத்தைப் பெறுதலான சமுக உதவியின் முக்கிய இலக்கை அடைவதற்கும் நீங்கள் முழு ஒத்துழைப்புக் கொடுத்தால் மட்டுமே அடையலாம்.

உங்கள் சகல கடமைகளையும் சுயமாகச் செயற்படுத்தக் கடமைப்பட்டுள்ளீர்கள். சமுக சேவையின் உதவிக்கடமை நீங்கள் உங்கள் விடயங்கசை சுயமாகச் செயற்படுத்த முடியாத நிலைகள் அல்லது கட்டாயம் ஏற்பட்டால் மட்டுமே ஆரம்பிக்கும்.

**உண்மை பேசுதல், ஒளிவுமறைவின்றி உரையாடல், ஒத்துழைப்பிற்குத் தயார்நிலை**

நீங்கள் உண்மை பேசி உங்கள் நிதி விடயங்களை ஒளிவு மறைவின்றி காண்பித்தால் மட்டுமே சமுகப்பகுதி சிறந்த உதவியை வழங்கமுடியும். பொய் களவு சந்தேகிக்கப்பட்டால் உங்கள் உதவிக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பொய்த் தகவல்கள் ஒளிப்பு மறைப்புகள் அடிப்படையில் சமுக உதவியின் பணத்தைப் பெறுவது சட்ட விரோதமாகும். எல்லா வருமான

மாற்றங்களையும் உடனுக்குடன் நாம் கேட்காமலே எம்மிடம் சுயமாகச் சமர்ப்பித்தல் வேண்டும். பொய் ஒளிவு மறைவுகள் அடிப்படையில் பெறப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். நேர்மையீனங்கள் ஏற்பட்டால் சமுக சேவையின் பரிசோதகர்கள் உங்கள் நடவடிக்கைகளைப் பரிசோதிப்பார்கள். குற்ற விடயங்களுக்குச் சட்டநடவடிக்கை வழக்குகள் தாக்கல் செய்யப்படும்.

## சமுகசேவையுடன் பிரச்சனைகள் ஏற்பட்டால் என்ன செய்யலாம்?

சமுகசேவையாளர்கள் உங்கள் சுய நிலையைக் கண்டுபிடிப்பதற்காக பல சொந்த விடயங்கள் தொடர்பாக வினாவுவார்கள். நீங்கள் சகல தகவல்களும் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளீர்கள். இதில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டால் குறிப்பிட்டவருடன் கலந்துரையாடலில் தெரிவியுங்கள். உண்மையான ஒளிவு மறைவின்றிய கலந்துரையாடல் பல பிரச்சனைகளைத் தீர்க்கும். இதில் முன்னேற்றம் பெறாவிட்டால் சமுகப்பகுதி நிர்வாகத்துடன் கலந்துரையாடுங்கள். சமுகசேவைப்பகுதியில் உடலியல் மற்றும் வார்ததைப் பிரயோகதில் பலாத்காரம் மற்றும் பயமுறுத்தல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்விடயங்களில் காவல்துறையின் சட்ட விடயங்கள் கவனிக்கப்படும்.

உங்கள் விடயங்கள் அடங்கிய தகவல் கோவையைப் பார்வையிட விரும்பினால் உங்கள் சமுக ஆலோசகருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## தொடர்புகள்

Sozialdienst Stadt Bern
Schwarztorstrasse 71,
3007 Bern
Tel. 031 321 60 27

## கடமை நேரங்கள்

| | |
|---|---|
| திங்கள் முதல் புதன் | 08.30 – 11.30 |
| | 14.00 – 17.00 |
| வியாழன் | 14.00 – 17.00 |
| வெள்ளி | 08.30 – 11.30 |
| | 14.00 – 16.00 |

கணக்காளர்

| | |
|---|---|
| திங்கள் முதல் புதன் | |
| வெள்ளி | 08.30 – 11.30 |

## புதிய விண்ணப்பங்களுக்கான அலுவலகநேரங்கள்:

| | |
|---|---|
| திங்கள் முதல் வியாழன் | 14.00 – 16.30 |
| வெள்ளி | 14.00 – 15.30 |